(11)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## திண்டுக்கல் மாவட்டம்

## 1432-ம் பசலி பூஜைப்பொருட்கள் சப்ளைக்கான - ஒப்பந்தப்புள்ளி படிவம்

பசலி 1432-க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உண்டான காலத்திற்கு **24.06.2022ம் தேதி பிற்பகல் 1.00 மணிக்குள்** கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வரிசை எண் | சப்ளை செய்யப்படவுள்ள இனத்தின் முழு விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் ( அனைத்து வரிகள் உள்பட ) ரூ. பை. |
|---|---|---|
| சப்ளை செய்யப்பட வேண்டிய பூஜைப்பொருட்கள் அடங்கிய செட் விவரம் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக விலை குறிப்பிட வேண்டும் | | |
| 1 | தேங்காய்(நன்கு முற்றிய தேங்காய் **30 செ.மீ** சுற்றளவு) 1-க்கு விலை | |
| 2 | பூவன் வாழைப்பழம் (50கிராம் எடை) 1-க்கு விலை | |
| 3 | கற்பூரவள்ளி வாழைப்பழம் (50கிராம் எடை) 1-க்கு விலை | |
| 4 | வெற்றிலை-3, பாக்கு-1 உடைய ஒரு செட் 1 க்கு விலை | |
| 5 | விபூதி 40கிராம் கொண்ட பாக்கெட் 1-க்கு விலை | |
| 6 | விபூதி 250கிராம் கொண்ட பாக்கெட் 1-க்கு விலை | |
| 7 | சந்தனம் 50கிராம் கொண்ட பாக்கெட் 1-க்கு விலை | |
| 8 | குங்குமம் 20கிராம் கொண்ட பாக்கெட் 1-க்கு விலை | |
| | கூடுதல் தொகை | |

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.
2. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.
3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் (PAN CARD) & GST சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிதாரரின் கையொப்பம்
(முழு விலாசம் அலைபேசி எண்ணுடன்)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

## 1432-ம் பசலிக்கு பூஜைப்பொருட்கள், தங்கரத புறப்பாட்டிற்கும், கட்டளைக்கும் தேவையான பொருட்கள் சப்ளை செய்தல்

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 1432-ம் பசலிக்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு வழங்கும் அர்ச்சனைப் பொருட்கள் சப்ளை செய்வதற்கும், தங்கரத புறப்பாடு நடத்தும் உபயதாரர்களுக்கு வழங்குவதற்கும், இத்திருக்கோயிலின் மலைக்கோயில் மற்றும் உபகோயில்களின் படித்தரம் பயன்பாட்டிற்கும், திருவிழா காலங்களில் உற்சவங்கள் பயன்பாட்டிற்கும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் **24.06.2022-ம் தேதி பிற்பகல் 1.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022-ம் தேதி பிற்பகல் 3.00 மணி** அளவில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற நபர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**சப்ளை செய்யப்பட வேண்டிய இனத்தின் விவரம்**

திருக்கோயிலுக்கு வருகைத்தரும் பக்தர்களுக்கு வழங்கும் அர்ச்சனைப் பொருட்கள் சப்ளை செய்வதற்கும், தங்கரத புறப்பாடு நடத்தும் உபயதாரர்களுக்கு வழங்குவதற்கும், இத்திருக்கோயிலின் மலைக்கோயில் மற்றும் உபகோயில்களின் படித்தரம் பயன்பாட்டிற்கும், திருவிழா காலங்களில் உற்சவங்கள் பயன்பாட்டிற்கும் தேங்காய், பழம் சப்ளை செய்தல்

1. a) **சப்ளை செய்யப்பட வேண்டிய அர்ச்சனைப்பொருட்கள் அடங்கிய செட் விவரம்**

அ) தேங்காய்-1 (நல்ல முற்றிய தேங்கய் 30செ.மீ சுற்றளவு கொண்டது)

ஆ) பூவன் வாழைப்பழம் - 2 (50கிராம் எடை கொண்டது)

இ ) வெற்றிலை-3, பாக்கு-1 உடைய ஒரு செட்

ஈ) விபூதி 40கிராம் கொண்ட பாக்கெட் ஒன்று

உ) குங்குமம் 20கிராம் கொண்ட பாக்கெட் ஒன்று

1. b) **தங்கரத புறப்பாடு நடத்தும் உபயதாரர்களுக்குரிய பொருட்கள்**

அ) தேங்காய்-1 (நல்ல முற்றிய தேங்கய் 30செ.மீ சுற்றளவு கொண்டது)

ஆ) கற்பூரவள்ளி வாழைப்பழம் - 2 (50கிராம் எடை கொண்டது)

1. c) **காலபூஜை நடத்தும் கட்டளைதாரர்களுக்குரிய பொருட்கள்**

அ) தேங்காய்-2 (நல்ல முற்றிய தேங்கய் 30செ.மீ சுற்றளவு கொண்டது)

ஆ) மலை வாழைப்பழம் - 6 (50கிராம் எடை கொண்டது)

ஈ) விபூதி 250கிராம் கொண்ட பாக்கெட் ஒன்று

உ) சந்தனம் 50கிராம் கொண்ட பாக்கெட் ஒன்று

**விலை குறிப்பிடுவதற்கான விவரம்**

இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் கொடுக்கப்படும் பட்டியல் பெற்று இனம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி தொகையினை எண் மற்றும் எழுத்தால் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்படும் விற்பனை வரி, வருமான வரி, GST வரி மற்றும் இதர வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேற்படி வரித்தொகை ஒவ்வொரு பட்டியலிலும் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் தனது முழு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்**

1 ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக ரூ.5,00,000/= (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையினை பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். வங்கிவரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2 01.05.2022-ம் தேதிக்குப்பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான ரூ.5,00,000/=க்கான (ரூபாய் ஐந்து லட்சம்) அசல் சால்வன்சி சான்றிதழ் இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு "செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பெயரில் பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையாகவும் செலுத்தலாம்.

3 ஒப்பந்தப்புள்ளிதாரரது நிரந்தர கணக்கு எண் (PAN CARD) & GST சான்றுநகல் ஒப்பந்தப்புள்ளியுடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4 மேற்காணும் வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

5 ஒப்பந்ததாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

6 ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தப்புள்ளியில் சப்ளை செய்வதாகக்குறிப்பிட்டுள்ள பொருளின் விவரம் டெண்டர் உறையின் மேல் குறிப்பிடல் வேண்டும்.

7 ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் "பெறுநர்" என்ற இடத்தில் "இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,பழனி" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

8 ஒப்பந்தப்புள்ளிதாரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனது சொந்த செலவில் உடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்தான ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

9 ஒவ்வொரு பிரிவிற்கும் தேவையான பொருட்களை சப்ளை செய்ய அந்தந்த பிரிவு பொறுப்பாளர்களிடம் அவ்வப்போது ஒப்பந்ததாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்று, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ளபடி குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான அளவு மேற்படி பொருட்களை அந்தந்த பொறுப்பாளர்கள் குறிப்பிடும் இடத்தில் தனது சொந்தப் பொருப்பில் சப்ளை செய்திடல் வேண்டும்.

/3/

10 ஒப்பந்ததாரரால் சப்ளை செய்யப்படும் அபிஷேகப்பொருட்கள்/அர்ச்சனைப்பொருட்கள்/ கட்டளை பொருட்கள்/தங்கரத உபயதாரர்களுக்கான பொருட்களை செட் நிபந்தனை எண்.1(a),(b),(c)ல் தெரிவித்த அளவுகளின்படி நல்ல நிலையில் உள்ளதாக இருக்க வேண்டும்.

11 ஐயப்ப பக்தர்களின் வருகை காலம், தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற விசேஷ காலங்களில் மேற்படி பொருட்கள் திருக்கோயிலுக்கு அதிகமாக தேவைப்படும்போது தங்குதடையின்றி குறிப்பிட்ட காலத்திற்குள் தரமானதாக சப்ளை செய்திடல் வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிர்வாகம் மூலம் வெளிமார்க்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால், ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.

12 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் மேற்படி பொருட்களை ஒப்பந்ததாரரே தனது சொந்தப்பொறுப்பிலும், செலவிலும் எடுத்துச் சென்று சம்பந்தப்பட்ட பிரிவுப் பொறுப்பாளர்கள் முன்னிலையில் எண்ணி காண்பித்து சப்ளை செய்ய வேண்டும்.

13 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட்ட மேற்படி பொருட்களுக்கான பட்டியல் வழங்குவதில் நிர்வாக ரீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்தக் காலதாமதத்திற்கு காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைப்பட்டியல் பெற்று, நல்ல தரமான பொருட்கள் சப்ளை செய்திடல் வேண்டும். 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே விலைக்கு தொடர்ந்து மேற்படி பொருட்களை சப்ளை செய்ய வேண்டும்.

14 சப்ளை செய்யப்படும் மேற்படி பொருட்களுக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கும் பட்டியல் ஒவ்வொன்றிலும் 10% பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும். பசலி முழுவதும் பிடித்தம் செய்த தொகை பசலி முடிந்தவுடன் ஒப்பந்ததாரரால திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டதாவென பரிசீலனை செய்து இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினை பிடித்தம் செய்து கொண்டு , மீதித் தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். இழப்பேற்படாவிடில் பிடித்தம் செய்துள்ள தொகை முழுவதும் வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

15 ஒப்பந்ததாரர் தனது ஒப்பந்தத்தை தனது சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது வேறு நபருக்கு ஒப்பந்தத்தை மாற்றிக் கொடுக்கவோ அல்லது உள்ஒப்பந்தம் விடவோ கூடாது.

16 ஒப்பந்ததாரர் இத்திருக்கோயில் ஒப்பந்த நிபந்தனைகளுக்கும் நடைமுறை விதிகளுக்கும், சட்ட திட்டங்களுக்குட்பட்டும் சப்ளை செய்யவேண்டும்.

17 தேவைப்பட்டியல் பெற்று தேவையான காலத்தில் தேவையான அளவு நல்ல தரத்தில் மேற்கண்ட பொருட்கள் சப்ளை செய்யாவிட்டாலோ அல்லது ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படியும் நடைமுறை விதிகளின்படியும் செயல்படாமல் இருந்தாலோ ஒப்பந்ததாரருக்கு எவ்விதமான முன்னறிவுப்புமின்றி ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்படும். மேலும் ஒப்பந்ததாரர் பெயர் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.

18 இதனால் இத்திருக்கோயிலுக்குத் தேவையான மேற்படி பொருட்கள் வெளி மார்க்கெட்டிலோ அல்லது கூட்டுறவு அங்காடி மூலமோ அல்லது விலைப்புள்ளி மூலமாகவோ கொள்முதல் செய்யப்படும். அதனால், திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் இழப்புத்தொகை முழுவதும் முதல் ஒப்பந்தப்புள்ளிதாரரே செலுத்த வேண்டும். தவறினால் சட்டவிதிகளின்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து வட்டியுடன் வசூலிக்கப்படும். மற்றும் திருக்கோயிலால் பிடித்தம் செய்யப்பட்ட 10% பில் தொகையிலிருந்தும், வைப்பு தொகையிலிருந்தும் மற்றும் பட்டியல் தொகையிலிருந்தும் மேற்படி இழப்பு தொகை பிடித்தம் செய்யப்படும்.

19 மேற்படி பொருட்கள் சப்ளை செய்வதில் இயற்கையாகவோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் ஒப்பந்ததாரருக்கு இடையூறு ஏற்பட்டாலும் அதற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பேற்காது.

20 ஒப்பந்தத்தினை எவ்வித காரணமும் கூறாமல் ஏற்கவோ, நிராகரிக்கவோ இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

21 ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

22 மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஆணையரால் அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த வைப்புத் தொகையினைத் தவிர மற்ற ஒப்பந்ததாரர்கள் செலுத்தியுள்ள ஒப்பந்த வைப்புத்தொகை திரும்ப வட்டியின்றி அவர்களுக்கு வழங்கப்படும்.

23 1432-ம் பசலித் தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று, அதில் பூஜைப்பொருட்கள் சப்ளை சம்பந்தமாக தணிக்கைத்தடை ஏதுமில்லையென்று தெரிந்த பின்னரே ஒப்பந்ததாரரின் ஒப்பந்த வைப்புத்தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். திருக்கோயிலுக்கு ஏதேனும் நிதியிழப்பு ஏற்பட்டிருப்பின், அதனை பிணை வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து மீதி தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

24 ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பின்பற்றத் தவறினாலோ அல்லது சரிவர நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

25 ஒப்பந்ததாரர் சப்ளை செய்யப்படும் காலத்தில் வரி விகிதங்களில் மாறுதல் ஏற்பட்டாலும், ஒப்பந்தப்புள்ளி தொகைக்கே ஒப்பந்தக்காலம் முடியும் வரை ஒப்பந்ததாரர் சப்ளை செய்ய வேண்டும்.

26 மது அல்லது லாகிரி வஸ்துக்கள் அருந்தியவர்களையோ, இந்துக்கள் அல்லாதவர்களையோ ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். 21 வயது பூர்த்தி அடையாதவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்க மாட்டார்கள். இந்து மதத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க அனுமதிக்கப்படுவர்.

27 ஒப்பந்தப்புள்ளி நேரம், தேதி மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் மாற்றியமைக்க இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. அதனை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்ததாரருக்கு கிடையாது.

/5/

28 திருக்கோயில் பழக்க வழக்கங்கள் நடைமுறைகளுக்கு விரோதமாக உரிம ஏலங்களை துய்க்க கூடாது. ஒப்பந்த நிபந்தனைகளை நன்கு அறிந்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதாக கருதப்படும்.

29 வரி விகிதங்களில் மாற்றம் ஏற்பட்டாலும் ஒப்பந்ததாரா் ஒப்பந்தப்புள்ளி விலைக்கே ஒப்பந்தப்புள்ளி காலம் முடியும் வரை சப்ளை செய்ய வேண்டும்.

30 திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுபவா்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவா்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவா்கள் மற்றும் வாரிசுதாரா்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாா்கள்.

31 டெண்டா் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலா் அவர்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

32 ஒருவர் கொடுத்த டெண்டர் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டார் என்று இணை ஆணையர்/செயல் அலுவலா் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையர்/ செயல் அலுவலா் அவா்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

33 இதர நிபந்தனைகள் டெண்டர் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையா்/செயல் அலுவலா்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

30/5/2022
மேலாளா்

30/5/22